

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கோவை தெற்கு மாவட்டம் சூலூர் ஒன்றியம் இருகூர் பேரூர் கழக தி.மு.க. சார்பில் பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு தினசரி காலை உணவு வழங்கும் திட்டத்தை இருகூர் பேரூராட்சி அலுவலகத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,நகர்புற வளர்ச்சி,மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துச்சாமி துவங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஒன்றியம், இராஜேந்திரபுரத்தில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி நா.கவிதப்பிரியா, அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், வட்டார வளர்ச்சி அலுவலர் குமாரவேலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும்ம அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## வருமான வரித்துறை பொழுதுபோக்குத் துறையாகிவிட்டது!

# எதிர்க்கட்சிகளைப் பழிவாங்க அரசு இயந்திரங்களைப் பயன்படுத்தும் அராஜகம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - ஒன்றிய அரசுக்கு கடும் கண்டனம்!

**சென்னை, நவ. 6 -**

**கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் நேற்று முன்தினம், சென்னை - அண்ணா அறிவாலயத்தில் 'கலைஞர் செய்திகள்' தொலைக்காட்சிக்கு அளித்த சிறப்புப் பேட்டியில், "அமலாக்கத் துறையும், வருமான வரித் துறையும் பொழுதுபோக்குத் துறைகளாகிவிட்டன" என்றும், "எதிர்க்கட்சிகளைப் பழிவாங்கிட, அரசு இயந்திரங்களை அராஜகமான முறையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு பயன்படுத்துகிறது" என்றும் கடும் கண்டனம் தெரிவித்தார்.**

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள், அளித்த அப்பேட்டியில் குறிப்பிட்டதாவது:-

தி.மு.க.வின் வரலாறு தெரியாமல் மோடி விளையாடுகிறார். பாஷாணத்தில் புழுத்த புழு திராவிட முன்னேற்ற கழகம். எமர்ஜென்சி நேரத்தில், பல்வேறு ரெய்டுகள் நடத்தி பல்வேறு சோதனைகள் நடத்தப்பட்ட போதுகூட, ஏறத்தாழ 50 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. தலைவர் வீட்டில் ரெய்டு நடத்தினார்கள். சின்னம்மா வீட்டில், எல்லோர் வீட்டிலும் ரெய்டு நடத்தினார்கள். எவ்வளவோ மந்திரிகள் இருந்தார்கள், ஆனால் குறிப்பிட்டு எங்கள் தலைவர் வீட்டில், தலைவர் குடும்பத்தை மட்டும் ரெய்டு செய்தார்கள். அவ்வாறு ரெய்டு செய்தார்களே, ஒரு கேஸ்ஆவது தலைவர் மேல் போடப்பட்டதா? நிரூபிக்கப்பட்டதா?

### துணிச்சல் மிக்க தலைவரை நாங்கள் பெற்றிருக்கிறோம்!

**எனவே தி.மு.க.வில் நீண்ட காலமாக இருப்பவர்களுக்கு இந்த வரலாறு எல்லாம் தெரியும். எனவே தி.மு.க.வில் இருக்கும் முக்கிய புள்ளிகளை சிறப்பாக பணியாற்றுபவர்களை எல்லாம் பழிவாங்கும் நோக்கத்தோடு ஒன்றிய அரசு செயல்படுமேயானால், அதை தி.மு.க. எதிர்கொள்ளும். லண்டன் வில் ஃபேஸ் இட் என்று சர்ச்சில் சொன்னதுபோன்று, ஸ்டாலின் வில் ஃபேஸ் இட். எங்களுக்கு அந்த தைரியம் இருக்கிறது. ஒரு துணிச்சல் மிக்க தலைவரை நாங்கள் பெற்றிருக்கிறோம்.**

**இவ்வளவு ரெய்டு நடத்துகிறீர்களே... மற்றவர்களை போன்று இவர் என்ன ஓடி ஒழிந்துவிட்டாரா? எடப்பாடி கும்பல், பி.ஜே.பி.யோடு அலையன்ஸ் இல்லை என்று சொல்கிறார்களே தவிர, மோடி பற்றி ஒரு வார்த்தை எடப்பாடி மற்றும் மற்றவர்கள் பேசுகிறார்களா? பேசவில்லை. காரணம், பயம். அண்ணாமலையை மட்டும் பேசுகிறார்கள். எனவே அவர்களுக்கு இருக்கும் பயம் ஒரு ரெய்டு நடத்தி விடுவார்களோ என்ற பயத்தில் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் நாங்கள் எதைப் பற்றியும் கவலைப்படவில்லை.**

காரணம், 22 வயதில் ஓராண்டு காலம் மிசாவில் சிறையிலிருந்து பல தியாகங்களை செய்து துன்பங்களை அனுபவித்து வந்தவர்தான் எங்களுக்கு இன்றைக்கு தலைவராக இருப்பவர். இது எல்லாம் அவருக்கு தூசு. இந்த மாதிரி ரெய்டுகள் எல்லாம் அவருக்கு பொழுதுபோக்கு போன்றது.

இப்போது எ.வ.வேலு மீது திடீரென்று ரெய்டு நடத்துவதற்கு என்ன காரணம் என்றால், சென்ற மாதம் 22ஆம் தேதி ஒரு மிகப்பெரிய மாநாடு போல, ஒரு நிகழ்ச்சியை திருவண்ணாமலையில் நடத்தினார் - பாக முகவர்கள் கூட்டம். அது தி.மு.க.விற்கு ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்துவது போன்று இருந்தது. அதை பார்த்து தாங்கிக் கொள்ள முடியாதவர்கள், அவர் மீது ரெய்டு நடத்தியிருக்கிறார்கள். நீங்கள் ரெய்டு நடத்தினால், இதைவிட பெரிய மாநாடு அவர் நடத்துவார்.



**காரணம், வேலு அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்தபிறகு உறுதி வாய்ந்தவராக தளபதியின் லெஃப்டினென்டில் ஒருவராக இருப்பவர். எனவே ரெக்கைகளை வெட்டி விட்டால் பறக்க முடியாது என்று நினைக்கிறார்கள். ஆனால் தி.மு.க.வின் இறக்கையை யாராலும் வெட்ட முடியாது. தி.மு.க. ஆயிரம் காலத்து பயிர். இந்த இயக்கத்தை வரலாறு தெரிந்தவர்களுக்கு தெரியும்.**

ஆனால் ஈ.டி. நடத்துகிறார்கள். இன்றைக்கு மக்கள் மத்தியில் இந்த ரெய்டு எல்லாம் எப்படி இருக்கிறது தெரியுமா... ஐ.டி., ஈ.டி., சி.பி.ஐ., எல்லாம் பி.ஜே.பி.யின் பிரச்சார பீரங்கி போன்று செயல்படுகிறது.

நான் கேட்கிறேன்... இதே தமிழ்நாட்டிற்கு ஒருவர் வீட்டிற்கு ரெய்டு செய்வதற்குச் செல்கிறார்கள். இதே அதிகாரிகள்தான். அவர் பி.ஜே.பி. காரர் என்றதும் வெளியே வந்துவிட்டார்கள். அதை இதே ஊடகங்கள் எல்லாம் போட்டு காட்டினார்கள். அது போன்று திட்டமிட்டு, இன்றைக்குகூட ராஜஸ்தானில், சத்தீஸ்கரில் ரெய்டு நடத்துவதாக சொல்கிறார்கள். அங்கும் எதிர்க்கட்சிக்காரர்கள் மீது செய்கிறார்கள்.

**எனவே ED என்பது என்ஃபோர்ஸ்மென்ட் டைரக்டரேட் என்பதற்குப் பதிலாக, என்டர்டைன்மென்ட் டிபார்ட்மென்ட். அதாவது பொழுதுபோக்கிற்காக இருக்கும் ஒரு டிபார்ட்மென்ட். எந்த வேலையும் கிடைக்கவில்லை என்றால் எதிர்க்கட்சிக்காரர்கள் யார் வீட்டிலாவது ரெய்டு செய்யலாம். என்ஃபோர்ஸ்மென்ட் ஹஸ் பிகம் என்டர்டைம்மென்ட் டிபார்ட்மென்ட் என்று சொல்லத்தக்க அளவிற்கு கேலிக்கூத்தாக்கி விட்டார்கள். மக்கள் மத்தியில் ஒரு சீரியஸ்னஸ்ஏ இல்லையே.**

முன்பெல்லாம் ஒரு ரெய்டு நடந்தால், என்ன நடந்தது என்று ஆர்வத்தோடு ஈவினிங் பேப்பரை படிப்பார்கள். இப்போது இந்த செய்திகள் எல்லாம் டிவியில் போட்டாலே ஸ்கிப் செய்துவிட்டு செல்கிறார்கள். காரணம் என்ன? இது வழக்கமாக நடப்பதுதான். ஒரு சீரியஸ்னஸ்ஏ மக்கள் மத்தியில் இல்லாமல் போனதற்கு காரணம், மோடியின் அரசு அது அவ்வளவு கேவலப்பட்டு இருக்கிறது.

### தமிழ்நாட்டு மக்கள் விழிப்புணர்ச்சியுடன் உள்ளனர்!

**அதோடு மட்டுமல்ல, ரெய்டு செய்ய சென்றார்களே, நேற்றைக்குகூட நான் டிவியில் பார்த்தேன். ஈ.டி. சார்பாக ரெய்டு செய்ய சென்ற அதிகாரிகளே 15 லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கி, அந்த பணத்தை எல்லாம் டிவியில் போட்டு காட்டினார்கள். எனவே இவர் அனுப்புகிற ஆள் ரூ.15 லட்சம் லஞ்சம் வாங்குகிறார். அனுப்பிய மோடி ஏழரை லட்சம் கோடி ரூபாய் லஞ்சம் வாங்கி ஊழல் செய்திருக்கிறார். எனவே மக்கள் இதை பார்க்க மாட்டார்களா... ஏழரை லட்சம் கோடி ரூபாய் ஊழல் செய்தவர், ரூ. 15 லட்சம் வாங்குகிறவர்களை ரெய்டு செய்வதற்கு அனுப்புகிறார். இது எப்படி ஒழுங்கான ரெய்டாக இருக்க முடியும் என்று பொதுமக்கள் சிந்திக்க மாட்டார்களா? முன்பு மாதிரி இல்லை, ஐ.நா. சபை வரை சென்று பேசும் அளவிற்கு ஒவ்வொரு இந்தியனும் தயாராகிவிட்டான். அந்த அளவிற்கு விழிப்புணர்ச்சி அரசியலில் வந்துவிட்டது. தமிழ்நாட்டு மக்கள் அதைப்பற்றி மிகவும் விழிப்புணர்ச்சியோடு இருக்கிறார்கள்.**

எனவே இந்த ரெய்டுகளால் ஒன்றும் செய்ய முடியாது. நான் கேட்கிறேன், இந்த ரெய்டுகள் நடத்தி, இன்றைக்கு மோடி சொல்கிறார், இந்தியாவிலேயே உள்ளங்காலில் இருந்து உச்சந்தலை வரை ஊழல் செய்திருக்கிற ஒரு பிரதமர் இந்தியாவில் இருக்கிறார் என்று சொன்னால் அது நரேந்திர மோடி என்பதை நாட்டு மக்கள் பேச ஆரம்பித்து விட்டார்கள்.

இவ்வளவு ரெய்டுகள் நடத்துகிறாரே... அதானி வீட்டிற்கு சென்றிருக்கிறாரா? அதானி வீட்டிற்கு சென்று ரெய்டு செய்ய முடிகிறதா? இது எப்படி வருகிறது என்றால், எதிர்க்கட்சிகளை பழிவாங்குவது. பிசினஸ்மேன்களை ரெய்டு செய்வதற்கு என்ன காரணம் என்றார், எலக்சன் பாண்டு வாங்க வைப்பதற்கு. ஏறத்தாழ 5000 கோடி ரூபாய்க்கு பி.ஜே.பி. வாங்கியிருக்கிறது என்று சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு ஆராய ஆரம்பித்து விட்டார்கள். தீர்ப்பு என்ன வரும் என்று தெரியவில்லை. சுப்ரீம் கோர்ட் மிகவும் கிடுக்குப்பிடி போடுகிற அளவிற்கு கேள்விகளை கேட்டிருக்கிறது. 5000 கோடி ரூபாய் ஒரு கட்சிக்கு வருகிறது என்றால் அதை மட்டும் மக்களுக்கு தெரியக்கூடாது. மற்ற கட்சிகள் வாங்குவதை மட்டும் தெரிந்து கொள்வதற்கு ஏன் முயற்சிக்கிறீர்கள் என்று எல்லாம் கேள்வி கேட்டிருக்கிறார்கள்.

### இது அதிக நாட்களுக்கு வொர்க்அவுட் ஆகாது!

**எனவே தேர்தல் நிதி வசூல் செய்வதற்காக, எலக்சன் பாண்டை பி.ஜே.பி.க்கு சேர்ப்பதற்காகத்தான் பணம் படைத்தவர்கள் வீடெல்லாம் சில ரெய்டுகள் நடத்தி அதன் மூலமாக வசூல் செய்வது, எதிர்க்கட்சிகளை பழி வாங்குவது இந்த இரண்டே ஏய்ம்தான் இன்றைக்கு மோடி செய்து கொண்டிருக்கிறார். இது அதிக நாட்களுக்கு வொர்க்அவுட் ஆகாது.**

1977 ஹிஸ்டரியை பார்த்தால் தெரியும். 1977க்கு முன்பு எமர்ஜென்சி நேரத்தில் என்னென்ன நடந்தது... அந்த ரெய்டுகளால் என்ன லாபம். ஒன்றுமே ஆகவில்லை. அதனுடைய விளைவு அந்த ஆட்சியே போனது. அவ்வாறு வந்த பிறகு யார் ஆட்சியில் இருந்தார்களோ அவர்கள் வீட்டிற்கே ரெய்டு சென்றது.

எனவே இன்னும் ஆறு மாதம் கழித்தால் இதே அதிகாரிகள் மோடியின் பின்புலம் இருக்கும் எல்லா லஞ்சம் வாங்கியவர்களும், தப்பு செய்தவர்களும், All Corrupt people and Rowdies in TamilNadu is BJP என்று சொல்லத்தக்க அளவில் நிலைமை வந்துவிட்டது. எத்தனை ரவுடிகள் பி.ஜே.பி.யில் சேர்ந்திருக்கிறார்கள் என்பதை இன்று பட்டியல் போட்டு காட்டுகிறார்கள். இதுதான் இன்றைக்கு எதார்த்தமான நிலைமை.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொருத்தமட்டில் நாங்கள் இதைப் பற்றி கவலையே படவில்லை. இட்ஸ் ஆல் இன் த கேம். சும்மா ஒரு பொழுதுபோக்கு மாதிரி. இது எங்களுக்கு ஒரு கேம் மாதிரி விளையாட்டு மாதிரி. மிகவும் டல்லாக இருக்கும் எங்களுக்கு ஒரு டானிக் கொடுக்கிற போன்றது, ரெய்டு நடக்க, நடக்க எங்கள் ஆள் எழுந்து நிற்பான். பாலிடிக்ஸ் திடீரென்று டல்லாகிவிட்டது. இப்போது இது மாதிரி இரண்டு, மூன்று ரெய்டு நடக்கும் போது பொலிட்டிக்கல்ஆக ஒரு பூஸ்ட் எங்களுக்கு வரும். அதனால் வீ வெல்கம் திஸ் ரெய்ட். இந்த மாதிரி ரெய்டுகளை தொடர்ந்து செய்யுங்கள். டெய்லியும் செய்யுங்கள். டெய்லி செய்ய வேண்டும். எல்லா மந்திரிகள் வீடுகளிலும் செய்யுங்கள். எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களின் வீடுகளிலும் செய்யுங்கள். தமிழ்நாட்டில் எல்லாம் செய்யுங்கள். அதையே செய்து கொண்டிருங்கள். நன்றாக இருக்கும்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகர தி.மு.க. சார்பில் சிர்காழியில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., பேசினார். உடன் சுற்றுசூழல் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மயிலாடுதுறை மாவட்டக்கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பன்னிர்செல்வம், பிரகாரன் சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம.சுப்பராயன் மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உள்ளனர்.

## கும்பகோணம் மேற்கு ஒன்றிய தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

தஞ்சாவூர் நவ. 6 .

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மேற்கு ஒன்றிய தி.மு.க செயல்வீரர்கள் கூட்டத்தில் இளைஞர் அணி மாநாட்டிற்கு அதிகபடியான இளைஞர்களை மேற்கு ஒன்றியத்திலிருந்து கலந்துகொள்ள செய்வது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கும்பகோணம் மேற்கு ஒன்றியம் செயற்குழு கூட்டம், ஆரியப்படைவீடு ஊராட்சி, பெரியார் நினைவு சமத்துவபுரம் திருமண மண்டபத்தில் அவைத்தலைவர் யு.எஸ்.ஆர்.லோகநாதன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கும்பகோணம் மேற்கு ஒன்றிய கழக செயலாளரும், தஞ்சை மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவருமான பம்பப்படையூர் எஸ்.கே.முத்துசெல்வம் கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் ஒன்றிய துணைச் செயலாளர்கள் டி.எஸ்.சண்முகம் டி.தியாக ராஜன் எ.அனிதா செல்வராஜ் ஒன்றிய பொருளாளர் சி.இளங்கோ மாவட்ட பிரதிநிதி ஆர்.வி. மணிவாசகம், ஆர்.அன்பழகன் பேரூர் கழகச் செயலாளர் எஸ்.எம்.எஸ்.பாலசுப்ரமணியம் சோழ நாடு கூட்டுறவு சங்க துணை தலைவர் சூரியமூர்த்தி, தங்கவேலு ,பாண்டியன் பகுதி கழக பொறுப்பாளர்கள் கோவிந்தராஜ், சசிகுமார், வைக்கம் மற்றும் ஒன்றிய, பேரூர் வார்டு கழக, கிளைக் கழக நிர்வாகிகள் , சார்பணி நிர்வாகிகள், பி.எல்.ஏ2, பி.எல்.சி நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிப்பார்த்தல் பணியை தீவிரமாக செய்வது எனவும்,, 2024 ல் நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் அரும்பாடுபட்டு கழக வெற்றிக்கு பாடுபடுவது எனவும், வருகிற 17.12.2023 அன்று சேலத்தில் நடைபெற உள்ள மாநில இளைஞரணி மாநாட்டிற்கு கும்பகோணம் மேற்கு ஒன்றியத்திலிருந்து அதிகபடியான இளைஞர்களை கலந்துக்கொள்ள செய்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



நாகை மாவட்டம், நாகை நகர பாகநிலை முகவர்கள் (பி.எல்.எ.2), பாக நிலை குழு உறுப்பினர்கள் (பி.எல்.சி.) கூட்டம் நாகையில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் பேசினார். உடன் நாகை சட்ட மன்ற தொகுதி பொறுப்பாளரும், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜெயபிரகாஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, பொதுக்குழு உறுப்பினர் எம்.பாண்டியன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, சந்தோஷ், இளம்சுந்தர், நகர நிர்வாகிகள் இரா.முருகையன், வெற்றிலைகடைசிவா, பி.திலகர், அபுபக்கர் மற்றும் பலர் உள்ளனர்.